பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 09 2026 MONDAY 7 15 AM
ஆகாஷ்வாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் மருத்துவக் கல்வியில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.
- நாட்டின் அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் தரமான சாலை வசதிகளை ஏற்படுத்தித் தர மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் செகான் தெரிவித்துள்ளார்.
- சுற்றுலா சார்ந்த பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.
- சீனாவில் நடைபெற்ற திறன் போட்டியில் இந்திய அணி சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தி இருப்பதாக மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
- ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவர் கிரிக்கெட் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் மருத்துவக் கல்வியில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கேரளம் மாநிலம் திருவனந்தபுரத்தில் மருத்துவ அறிவியல் கல்லூரி ஒன்றின் பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைக்க ஆரோக்கியம் முக்கியமானது என்று கூறினார். மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் இன்றியமையாதது என்று அவர் தெரிவித்தார். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அதே வேளையில் அறிவியல் முன்னேற்றத்துடன் அறநெறிகளையும் பின்பற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

மருத்துவக் கல்வி உட்பட அனைத்துக் கல்வித் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்கள் முன்னேறுவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திரு சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

------------

நாட்டின் அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் தரமான சாலை வசதிகளை ஏற்படுத்தித் தர மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் செஹோர் மாவட்டத்தில் 36 புதிய கிராம சாலைகளுக்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

106 கிலோ மீட்டர் நீளத்துக்கு இந்த சாலைகள் அமைக்கப்படுவதாகவும், இவற்றுக்கான பணிகள் ஓராண்டுக்குள் நிறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சாலைகள் பயன்பாட்டுக்கு வரும்போது இப்பகுதி மக்களின் வாழ்வாதாரமும் வாய்ப்புகளும் மேம்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் நான்காவது கட்டத்தில் ஒவ்வொரு குக்கிராமத்துக்கும் சிறந்த சாலை இணைப்பை உறுதி செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

------------

தேசத்தின் முன்னேற்றத்துக்கு வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர்களின் வரலாறுகளை இளையோரிடைய கொண்டு சேர்ப்பது அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

விஷ்வ ஹிந்து பரிக்ஷத்தின் முன்னாள் தலைவர் மறைந்த அசோக் சிங்காலின் நூற்றாண்டு விழாவையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நமது செயல்பாடுகள் சுயநலமற்ற சேவை மனப்பான்மையுடன் கூடியதாக இருக்க வேண்டும் என்றார்.

அத்தகைய அர்ப்பணிப்புடன் திகழ்ந்தவர் அசோக் சிங்கால் என்று அவர் தெரிவித்தார்.

அவரது வாழ்க்கை ஒவ்வொரு இளைஞருக்கும் உத்வேதம் அளிக்கக் கூடியது எனவும் திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

------------

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மூன்று நாள் அரசு முறைப் பயணமாக கத்தார் சென்றுள்ளார்.

அவருடன் நிதியமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் குழுவும் கத்தார் சென்றுள்ளது.

இந்தப் பயணத்தின்போது, இன்று தோஹாவில் நடைபெறவுள்ள ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் 11-வது ஆண்டு கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார். மேலும் அந்த வங்கியின் தலைவருடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன் ஜோர்டான், சுவிட்சர்லாந்த், அல்ஜீரியா, சவுதி அரேபியா, நேபாளம் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்களுடனும் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

கத்தார் அரசின் மூத்த தலைவர்களைச் சந்திப்பதுடன், முதலீடுகளை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு முதலீட்டாளர்களுடனும் திருமதி நிர்மலா சீதாராமன் கலந்துரையாடவுள்ளார்.

------------

கால்நடைகள் காப்பீட்டுக்கான இணையதளத்தை மத்திய கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு திரு ராஜீவ் ரஞ்சன் சிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

நாட்டில் கால்நடைகளுக்கான காப்பீட்டு சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதில் முக்கிய நடவடிக்கையாக இந்த இணையதளம் தொடங்கப்படுகிறது.

காப்பீடு செய்யப்பட்ட கால்நடைகள் தொடர்பாக, இந்த இணையதளம், ஒருங்கிணைந்த டிஜிட்டல் சேவைகளை வழங்கும். காப்பீடு பாலிசி வழங்குதல், கோரிக்கை செயலாக்கம், கண்காணிப்பு ஆகியவற்றை நெறிப்படுத்த இந்த தளம் உதவும் என கால்நடைப் பராமரிப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த இணையதளத்தின் சேவைகள் இந்தி, ஆங்கிலம் தவிர 11 மாநில மொழிகளிலும் கிடைக்கும் எனவும், இதன் மூலம் கால்நடை விவசாயிகள் தங்களுக்கு வசதியான மொழியில் தகவல்களையும் சேவைகளையும் பெற முடியும் என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

------------

பழங்கால சிற்பங்களைக் கண்டறிந்து அவற்றை இளையோரிடையே கொண்டு சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் தமது பணிகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று மன் கி பாத் உரையில் பாராட்டியது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தமிழகத்தின் மணப்பாறையைச் சேர்ந்த பேராசிரியர் செல்வராஜ் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய திரு செல்வராஜ் இதனைத் தெரிவித்தார்.

------------

சுற்றுலா சார்ந்த பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

உள்நாட்டு சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான இரண்டாம் கட்ட இயக்கத்தை தில்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

தேசிய டிஜிட்டல் சுற்றுலா கட்டமைப்பு மற்றும் மாற்று சுற்றுலாத் தலங்களுக்கான தேசிய இயக்கம் ஆகியவற்றையும் அவர் தொடங்கி வைத்தார்.

நாட்டின் சுற்றுலாவின் அடுத்த கட்டமாக, பிரபலமான சுற்றுலாத் தலங்களைத் தாண்டி மண்டல அளவிலான சுற்றுலா தலங்கள் பிரபலம் அடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். அதிகம் அறியப்படாத சிறந்த இடங்களை ஊக்குவிப்பதே இந்த இயக்கத்தின் நோக்கம் என்று அவர் தெரிவித்தார்.

இது உள்ளூர் மக்கள், தொழில்முனைவோர், இளைஞர்கள் ஆகியோருக்கு வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து, தனித்துவமான இடங்கள் அடையாளம் காணப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தில் மலைப் பகுதிகள், கடற்கரை சார்ந்த இடங்கள், பாரம்பரியம் சார்ந்த நகரங்கள், உள்ளூர் அளவிலான பிரபலமான புனிதத் தலங்கள் ஆகியவற்றின் மீது கவனம் செ

------------

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் உள்ள உள்ளூர் சுற்றுலா தலங்களை சர்வதேச அளவில் கொண்டு செல்லும் நோக்கில் ஆவணப்படம் வெளியிடப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் லீலா அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வேலூர் கோட்டையில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

------------

சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற 48-வது உலக திறன் போட்டி நேற்று நிறைவடைந்தது.

70 நாடுகள் பங்கேற்ற இப்போட்டியில் இந்தியா ஆறு வெள்ளிப் பதக்கங்களையும், 20 உயர் சிறப்புத் திறனுக்கான பதக்கங்களையும் வென்றது.

கடந்த முறை 13-வது இடத்தைப் பிடித்த இந்தியா இந்த முறை 3 இடங்கள் முன்னேறி 10-வது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்திய அணியின் சிறப்பான செயல்பாட்டிற்குப் பாராட்டுத் தெரிவித்துள்ள மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு.ஜெயந்த் சௌத்ரி, இப்போட்டியில் இந்திய அணி வெளிப்படுத்திய அபாரத் திறன், உலகளாவிய திறன் மேம்பாட்டுப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

முந்தைய சாதனைகளை முறியடித்து, நாட்டின் இளம் போட்டியாளர்கள் இந்தியாவின் திறன்மிக்க மனிதவளத்தின் வலிமையை வெளிப்படுத்தியுள்ளனர் என்று திரு ஜெயந்த் சௌத்ரி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

------------

எரிசக்திப் பாதுகாப்பை இந்தியா தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

தில்லியில் இளம் தொழில் வல்லுநர்களிடையே கலந்துரையாடிய அவர், உலகின் மூன்றாவது பெரிய எரிசக்தி நுகர்வு நாடாக இந்தியா திகழ்கிறது என்றார். புவிசார் அரசியல் நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியிலும், இந்தியா தனது எரிசக்தி ஆதாரங்களை வெற்றிகரமாகப் பன்முகப்படுத்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சிக்கலான சூழல்களிலும் தடையற்ற எரிபொருள் விநியோகத்தை இந்தியா உறுதி செய்துள்ளது என்று திரு ஹர்தீப் சிங் பூரி குறிப்பிட்டார்.

------------

பயங்கரவாதத்துக்கு எதிராக இந்தியா நடத்திய துல்லிய தாக்குதலின் 10-வது ஆண்டு நிறைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

உரி பயங்கரவாதத் தாக்குதலில் 19 இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்ததற்கு பதிலடி கொடுக்கம் வகையில் 2016-ம் ஆண்டு செப்டம்பர் 28 மற்றும் 29-ம் தேதிகளில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீர் பகுதியில் பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா இந்த துல்லியத் தாக்குதல்களை நடத்தியது.

------------

*உலக ரேபிஸ் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.*

*வெறிநாய்க்கடி நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதைக் கட்டுப்படுத்தவும் இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.*

*இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடித்த பிரான்ஸ் விஞ்ஞானி லூயி பாஸ்டரின் நினைவு நாளான செப்டம்பர் 28-ம் தேதி, 2007-ம் ஆண்டு முதல் ரேபிஸ் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.*

------------

*அந்தமான் - நிக்கோபார், தெற்கு உள் கர்நாடகா மற்றும் உத்தராகண்ட்டின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*ஹிமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், ஆந்திரா, பீகார், மகாராஷ்டிரா, ஒடிசா, தெலங்கானா ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

------------

*ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவர் கிரிக்கெட் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*இப்போட்டி நிஷினில் இந்திய நேரப்படி காலை 10:30 மணிக்கு தொடங்கவுள்ளது.*

*இதனிடையே இன்று அதிகாலை தொடங்கவிருந்த ஹாங்காங் – பாகிஸ்தான் இடையேயான மற்றொரு காலிறுதி ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.*

*>>>>>>>END<<<<<<<*